# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590**

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண்.NC2607/F/2019 (SA3462/F/2019)**

திருமதி வெ. வசுமதி … மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/ மின்னியல்,
தலைமைப் பொறியாளர் அலுவலகம்/பகிர்மானம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி. … பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 30.01.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 04.03.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 11.04.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 17.09.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 11.11.2019 |

******

# ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 17.09.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விசாரணையில் மனுதாரர் திருமதி வெ. வசுமதி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக செயற்பொறியாளர்/ மின்னியல், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருநெல்வேலி ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 30.01.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மின் பகிர்மான வட்டத்தில் உதவி செயற்பொறியாளர்(விரிவாக்கம்) பணி புரிந்துள்ளதாகவும், தன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து இடமாற்றம் செய்ததாகவும், விழிப்புப்பணி குழுவினர் தன் மீது நடவடிக்கை எடுக்கக்கொடுத்த அறிக்கையின் நகல், தன்மீது வந்த புகார் கடித நகல், பணிமாற்றத்திற்காக நிர்வாகக் காரணமாக மேற்பார்வை பொறியாளர் எழுதிய கடித நகல் போன்ற தகவல்களை குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தலைமைப் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருநெல்வேலி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 15.02.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 8(1)(J)ன்படி மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் விலக்களிக்கப்படுகிறது என தகவல் வழங்கியுள்ளார். தான் கோரிய தகவல் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்றும், அவற்றை வழங்கக் கேட்டும், 04.03.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 13.03.2019 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலரும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையே வழங்கியுள்ளார். அதனைத்தொடர்ந்து மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் வழங்க மறுத்துள்ளதாகவும், தகவல் வழங்க மறுத்த அலுவலருக்கு உரிய தண்டனை வழங்கவும்., தான் கோரிய சரியான தகவல்களை பெற்று வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 11.04.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 17.09.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA3462/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 11.11.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய 3 இனங்களில் முதலாம் இனத்திற்குரிய தகவல் முழுமையானதாகவும் தெளிவான நகல் தனக்கு அளிக்கப்படவில்லை எனவும், 2 மற்றும் 3 வது இனங்களுக்கு முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்கவில்லை எனவும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் முழுமையான மற்றும் தெளிவான நகல்களை தனக்கு பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையின்போது பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய முழுமையான தகவல்களை 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு உரிய,

முழுமையான தகவல் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காத அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் ஏறத்தாழ 2 வருட காலமாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 2 வார காலத்திற்குள் பதிவுத் தபால் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 30.01.2019 தேதியிட்ட மனுவில் கோரிய விடுபட்ட இனங்களுக்கான முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் 30.01.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.NC2607/F/2019 (SA3462/F/2019)</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/ மின்னியல்,
தலைமைப் பொறியாளர் அலுவலகம்/பகிர்மானம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>

திருமதி வெ. வசுமதி,
உதவி செயற்பொறியாளர் (முறைப்பணி),
எண்.230/110/22, கி.வோ. உபமின் நிலையம்,
முத்தையாபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

Copy to: Judgement File.

Spare/ JE / PA 19.11.2020